## ஊனமுற்ற இராணுவச்சிப்பாய்களுக்கு
# ராகமவில் புனர்வாழ்வு இல்லம்

வடக்கு கிழக்கு யுத்தத்தில் கை, கால்களை இழந்த இராணுவத்தினர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நோக்குடன் எண்பது கோடி ரூபா செலவில் புனர்வாழ்வு இல்லம் ஒன்று ராகமவில் நிர்மாணிக்கப்பட்டு ஜனாதிபதியின் மனைவியினால் சமீபத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தில் ஊனமுற்ற 450 சிப்பாய்கள் தற்போது இருப்பதாகவும், ஆனால் வாரா வாரம் ஊனமுற்றவர்கள் வருவதாகவும் இத்தொகை மேலும் அதிகரிக்கக் கூடிய நிலைமையுள்ளதெனக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## அதிகாரிகளை நிருபர்கள் சந்திக்கத் தடை
# இராணுவத் தகவல் மையம் ஆரம்பம்

ஸ்ரீலங்கா இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன பதவி ஏற்றதையடுத்து இராணுவத் தகவல் நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்தகவல் மையம் இராணுவ தலைமையகத்தில் இயங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உள்ளூர், வெளியூர் செய்தியாளர்கள் இத்தகவல் நிலையமூடாகவே இனி இராணுவம் தொடர்பான செய்திகளைப் பெறவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இராணுவத் தலைமையகத்திலுள்ள உயர் அதிகாரிகளிடம் தனிப்பட்ட ரீதியில் செய்திகளைப்பெற்றுக்கொள்வதைத் தடுக்கவே இப்புதிய நடவடிக்கை .. 40ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு | விலை ரூபா:- 5 - 00

# முரசொலி

முரசு 05 ஒலி 309 பிரசோற்பத்தி கார்த்திகை 02 (18 - 11 - 1991) திங்கள்

## யாழ் தொலைபேசிக்கட்டணம் செலுத்தி
# கொழும்பில் வாழும் சில யாழ்வாசிகள் தொலைபேசி இணைப்புக்கேட்கின்றனர்

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பில் இடம்பெயர்ந்து தங்கியுள்ள சில செல்வந்தர்கள் தமது யாழ்ப்பாண தொலைபேசி இணைப்பைக் கொழும்பில் தருமாறு தபால் தந்தி தொடர்புகள் அமைச்சிடம் கோரியுள்ளனர். இராணுவ நடவடிக்கை காரணமாக தமது தொலைபேசித் தொடர்பு பாதிக்கப்பட்டதாகவும் யாழ்ப்பாணத்தின் தொலைபேசிக் கட்டணத்தை தாம் முழுமையாகச் செலுத்துவதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனராம். இதனால் தமக்கு கொழும்பில் தொலைபேசி இணைப்பை ஏற்படுத்தித் தருமாறும் இவர்கள் கேட்டுள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# காங்கேசன் துறைமுக லொறிச் சேவை; போக்குவரத்து விவரம் தெரிவிக்கவில்லை

## பாதுகாப்பு வலயம் குறித்து அரசு மௌனம்

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு கப்பல்களில் உணவுப் பொருள்கள் இறக்கப்பட்டாலும் அவற்றை லொறிகளில் எடுத்து வருவது பற்றி இன்னமும் விவரம் தெரியவில்லை எனக் கூட்டுறவு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வருடமும் காங்கேசன்துறை துறைமுகப் பகுதியை பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தி பொருள்களை இறக்கி லொறிகளில் எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டு பின்னர் அது கைவிடப்பட்டதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்காகச் சில லொறிச் சாரதிகள், கிளினர்களின் பட்டங்கள், அடையாள அட்டை இலக்கம் என்பனவும் சேகரிக்கப்பட்டதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன

மாவிட்டபுரத்தில் இருந்து காங்கேசன்துறை துறைமுகம்வரை படையினர் நிலைகொண்டிருப்பதால் லொறிகள் போய் வருவது பற்றி இன்னமும் முடிவு எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இப் பகுதியை பாதுகாப்பு வலயமாக்குவது பற்றி விடுத்த கோரிக்

—04 ஆம் பக்கம் பார்க்க

## தாய்லாந்து பொறியியலாளர் பொலநறுவையில் விடுதலை

மட்டக்களப்பு பொலநறுவை எல்லைப்பகுதியில் மின்வயர் பொருத்தும் வேலையிலீடுபட்டிருந்த போது கடத்திச் செல்லப்பட்ட இரு தாய்லாந்து பொறியியலாளர்களும் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

—04 ஆம் பக்கம் பார்க்க

## டிசம்பர் முதல்வாரத்தில் சார்க்; மாலைதீவு முழு முயற்சி!

கொழும்பு சார்க் மாநாட்டை எதிர்வரும் டிசம்பர் மாத முதல் வாரத்தில் நடாத்த மாலைதீவு முழு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

டிசம்பர் 22 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகும்

...04 ஆம் பக்கம் பார்க்க

# அம்பாறை,திருமலைரோந்துப்படை புலிகளினால் தாக்கப்பட்டது

அம்பாறை, திருகோணமலைப் பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் தாக்குதல்கள் நடாத்தியதாக பாதுகாப்பு அமைச்சு நேற்றுத் தெரிவித்தது

அம்பாறையில் கல்முனை முகாமிலிருந்து காலநடையாகச் சென்ற பொலிஸ் அதிரடிப்படைமீது விடுதலைப் புலிகள் பாண்டிருப்புப் பகுதியில் வைத்து தாக்குதல் நடாத்தினர்.

கடற்கரையோர வீதியில்

—04 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் கைதானவர்கள் தொடர்ந்தும் தடுத்துவைப்பு

வவுனியாவில் இறுதியாக

இவ்வாறு கைது செய்தோர்

## சிங்கள நபரைத்தாக்கிய

போது கடத்திச் செலப்

—04 ஆம் பக்கம் பார்க்க

## சிங்கள நபரைத்தாக்கிய தமிழ் இளைஞர்கள் கைது

தெஹிவளையில் வசிக்கும் இரு தமிழ் இளைஞர்கள் அப் பகுதியைச் சேர்ந்த சிங்கள நபர் ஒருவரைத் தாக்கியதாக் கல்கிசை நீதிமன்றத்தில் வழக்குத்தாசகல் செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் சிங்கள நபரைத் தாக்கி படு காயப்படுத்திய தாக குற்றம் சாட்டப்பட்டுள் ளது

தமிழ் இளைஞர்கள் சார் பில் ஆஜரான சட்டத்தரணி

...04 ஆம் பக்கம் பார்க்க

## கைப்பற்றிய ஆயுதப் படகு தாய்லாந்தைச் சேர்ந்ததாம்

அண்மையில் இந்தியக் கடற் படையினால் பிடிக்கப்பட்ட ஆயுதப்படகு தாய்லாந்து நாட்டைச் சேர்ந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

'தொன்னோவா' எனப் பெயர் பொறிக்க பட்ட இப் படகில் விடுதலைப் புலிகள் ஆயுதம்கடத்தியதாக இந்தியப் பத்திரிகையான பெட்ரியட் செய்தி வெளியிட்டுள்ளது

தற்போது இப்படகு சென்னை துறைமுகத்தின் மறைவான ஒரு பகுதியில் பாதுகாப்பாக நிறுத்தப்பட்டுள்ளதாம்.

## ஜே. வி. பி. சந்தேக நபர்கள் பொலிஸில் பதியவேண்டியதில்லை

ஜே. வி. பி. வன்முறைகளின் போது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டவர்கள் மாதாந்தம் பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என்ற கட்டுப்பாடு

—04 ஆம் பக்கம் பார்க்க

## தொடர்ந்தும் தடுத்துவைப்பு

வவுனியாவில் இறுதியாக நடந்த இராணுவ சோதனையின் போது சாந்தசோலைப் பகுதியில் வைத்து வெளியூர் வியாபாரிகள் 200 பேரை அண்மையில் இராணுவம் கைது செய்தது.

இவ்வாறு கைது செய்தோர் முகமூடி இளைஞர் முன்னிலையில் வைத்து அடையாளம் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் 22 பேர்

—04 ஆம் பக்கம் பார்க்க

## அணு ஆயுத பரவலுக்கு தடை; இந்தியாவை ரஷ்யா கைவிட்டது!

அணு ஆயுத பரவலுக்கு எதிரான சாசனம் நேற்று முன்தினம் ஐ. நா சபையில் வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட போது சோவியத் யூனியன் முதற்தடவையாக ஆதரவாக வாக்களித்துள்ளது.

இதுவரை அணு ஆயுத பரவல் தடைக்கு எதிரான சாசனம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் போது சோவியத் யூனியன்

—04 ஆம் பக்கம் பார்க்க

### 1990 இல் தடைப்பட்ட க. பொ. த. சாதாரணதரம்

## பரீட்சை எடுக்கத் தவறிய 24 ஆயிரம் பேர் இவ்வாண்டு எடுக்கச் சந்தர்ப்பம்

எதிர்வரும் டிசம்பர் 9ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க. பொ. த சாதாரண தரப்பரீட்சையில் கடந்த ஆண்டு வடக்கில் பரீட்சை எடுக்கத்தவறிய இருபத்திநான்காயிரம் பரீட்சார்த்திகள் பரீட்சை எழுத சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது.

இத்தகவலை பரீட்சை ஆணையாளர் ஆதர்வெத முதல வெளியிட்டார். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 177 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறும்

புதிய பாடதிட்டத்தின் கீழ் பரீட்சை எழுதுவோருக்கு இந்த ஆண்டுக்கென தயாரிக்கப்பட்ட வினாத்தாள் வழங்

—04 ஆம் பக்கம் பார்க்க

நேற்றுத் தெரிவித்தது.

அம்பாறையின் கல்முனை முகாமிலிருந்து கால்நடை

நடாத்தினர்.

கடற்கரையோர வீதியில்

—04 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைத் தூதரக ஊழியர் இறந்த பெண்ணில் மோசடி

சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பணிபுரியும் சிங்கள ஊழியர் ஒருவர் இறந்த பெண் ஒருவரின் பெயரில் ஆயிரக்கணக்கான ரூபாவை மோசடி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

இறந்த பெண் ஒருவரின் வாரிசு என இவருக்கு சட்ட பூர்வ அந்தஸ்து வழங்கப்பட்

—04 ஆம் பக்கம் பார்க்க

## இந்தியப் பொலிஸ் குழு மீண்டும் கொழும்பு வரும்

மீண்டும் இந்தியப் பொலிஸ் புலனாய்வுக் குழுவொன்று கொழும்பு வருகிறது.

இம்முறை பத்மநாபா கொலை வழக்கு தொடர்பான சில தகவல்களை ஸ்ரீலங்கா அதிகாரிகளிடம் பெறுவதற்காக கொழும்பு வருவதாக இந்திய செய்திகள் தெரிவித்தன.

—04 ஆம் பக்கம் பார்க்க

## சத்துணவு வழங்கப்பட்டது

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள முகாம்களில் தங்கியுள்ள கர்ப்

—94 ஆம் பக்கம் பார்க்க

● புதிய தளபதி சிசில் வைத்யரத்ன கூறுகிறார்

# இராணுவப் பிரிவுகளுக்குள் பெரும் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும்!

''ஏற்கனவே உள்ள இராணுவப் பிரிவுகளுக்குள் பெரும் மாற்றம் கொண்டு வந்து, சிறந்த பயிற்சி பெற்ற விசேடபடைப்பிரிவு ஒன்றை அமைக்கவுள்ளேன் அந்த வகையிலேயே இராணுவ நடவடிக்கைகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும்''

இவ்வாறு ஸ்ரீ லங்காவின் புதிய இராணுவத் தளபதியாகப் பதவியேற்றுள்ள மேஜர் ஜெனரல் சிசில் வைத்யரத்ன பதவியேற்பின் பின் கூறியதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது

இராணுவத்திக் கடுமையான ஒழுங்கும், நேர்மையும் நிலைநாட்டபடும் என அவர் கூறியதாகவும் இச்செய்தி கூறுகிறது.

# உட்கட்சிப் பூசலைத்தீர்க்க 4 அம்சத்திட்டம்; ஸ்ரீமாவோ ஏற்பாரா?

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் நிலவும் உட்பூசலைத் தீர்க்க நான்கு அம்சத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாகவும் இதனை திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஏற்றுக் கொள்வாரா வழினாமாச் செய்வாரா என்று அரசியல் வட்டாரங்கள் கேள்வி எழுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

கட்சிக்குள் நிலவும் உட்கட்சிப் பூசலைத் தீர்ப்பதற்காக நாடெங்கிலுமுள்ள கட்சியின் கிளைகளின் கூட்டங்களைத் திருமதி பண்டாரநாயகா கூட்டுவாரா அல்லது அவரது ஆதரவாளர்களால் உருவாக்கப்பட்டுள்ள நான்கு அம்சத்திட்டத்தை ஏற்றுக் கொண்டு கட்சித் தலைமைப் பதவியில் தொடர்ந்தும் இருப்பாரா? என்பது பற்றிய தெளிவான நிலை எதுவும் இன்னமும் தெரியவரவில்லை.

தனது மகளான திருமதி சந்திரிகா விஜயகுமாரணதுங்காவை அவர் கட்சிக்குள் சேர்த்து முக்கிய ஸ்தானம் வழங்குவதை அவரது அதிருப்தியாளர்கள் விரும்பவில்லை என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது.

## ராமர் கோயில் அமைக்க

# உ.பி. அரசுக்கு இந்திய உயர் நீதிமன்றம் தடை

அயோத்தி நகரில் பள்ளிவாசல் அமைந்துள்ள இடத்தில் புதிதாக ராமர்கோயிலை உத்தரபிரதேச அரசு நிறுவக் கூடாது.

இவ்வாறு இந்திய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவ் விவகாரம் பெரும் கொந்தளிப்பைத் தொடர்ந்து ஏற்படுத்தி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## செக்கோசிலேவேகியாவிலிருந்து

# டாங்கிகள், சீனாவிலிருந்து ராணுவ வாகனங்கள்

செக்கோச்சிலேவேகியாவிலிருந்து ரி 83ரக டாங்கிகளையும் சீனாவிலிருந்துஇராணுவ வாகனங்களையும் ஸ்ரீலங்கா இராணுவம் அண்மையில் கொள்வனவு செய்ததாக புதிய இராணுவத் தளபதி இராணுவத் தலைமையகத்திடம் தனக்களிக்கப்பட்ட அணிவகுப்பையடுத்து செய்தியாளர்களிடம் கூறினார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன

'வட, கிழக்கில் நடைபெற்றுவரும் போரில் காயமடையும், அல்லது அங்கவீனமடையும் படையினர்க்கு சேமநலன் புனர்வாழ்வு ஆகியவற்றிற்கு அதிக முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் அவர் சொன்னார்

'சண்டே ஒ சேவர்' நேற்று இதுபற்றி மேலும் தெரிவிக்கையில், காயமடையும் படையினருக்கு சிறந்த முறையில் உடன் சிகிச்சையளிப்பதற்கும் கூடிய கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் செய்தியாளரிடம் கூறியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம்

யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் சென்ஜோன்ஸ் கல்லூரியில் அதன் தலைவர் திரு. கே யதுகுலசிங் தலைமையில் நடைபெற்றபொழுது கீழ்வருவோர் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்,

தலைவர் திரு எம் டி தம்பிராசா, செயலாளர் திரு. ஏ. தேவராசா, அதிகாரி கப்ரின் டீ ஏ எம் குணசிங்கம், உப தலைவர்கள் திருவாளர்கள் கே. என். வை மொறிஸ், கிளிபேட் அந்தனிப்பிள்ளை, எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளை, ஜீ. எம். செபஸ்தியாம்பிள்ளை, எஸ் அண்ணாத்துரை ஆகியோராவர்.

## இடைத்தேர்தல்

# முதல் வெற்றி அறிவிப்பு இந்திரா காங்கிரஸுக்கு சாதகம்

இந்தியாவில் இடம்பெற்ற இடைத் தேர்தல்களில் முதல் வெற்றி இந்திராகாங்கிரஸுக்கு கிடைத்துள்ளது.

மணிப்பூர் தொகுதியிலேயே அபாவ்டேவிட் என்ற இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளார்.

## நல்லூர்உ. அ. அதிபர் கோரிக்கை

''நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சகல மொத்த சில்லறை வியாபாரிகளையும், சகல கிராம அலுவலர்களையும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 00 மணிக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் உள்ளபலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்திற்குத் தவறாது சமுகம் அளிக்குமாறு நல்லூர் உதவி அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

# வன்னியில் மாவீரர் எழுச்சி நாள்

## புதுக்குடியிருப்பு .......

'மாவீரர் வழியில் லெப்டினன் துர்க்கா' என்ற வில்லிசையும், 'திரும்பிப்பார்' ஒரு துரோகியின் சமாதி' என்ற நாடகங்களும் மாவீரர் நாள் கலை நிகழ்ச்சிகளாக இடம் பெறவுள்ளன.

## முல்லை பிரதேசத்தில்

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் மாவீரர்நாள் கொண்டாட்ட வைபவங்களில் கலை நிகழ்ச்சிகளாக, தமிழரின் 'மானம் காத்த நாள்' என்ற வில்லிசையும் 'விலங்குகள் தெறிக்கின்றன' காலம் இட்ட கட்டளை' 'கண் திறந்தது. என்ற நாடகங்களும் முல்லை மாவட்டக் கலை - பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளரினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன

## ஒட்டுசுட்டான்......

'வடக்கா?கிழக்கா?தெற்கா?' 'போர் முனையில்' 'தமிழோசை' ஆகிய நாடகங்களும் கிராமிய நடனம், கவிதை, பட்டிமன்றம் என்பவும் நடைபெற ஏற்பாடாகி உள்ளன.

# சிதம்பரத்தில் சிக்கினார் பாண்டிச்சேரி முதல்வர்

காரைக்கால் பகுதியில் ஏற்பட்ட வெள்ளச் சேதங்களைப் பார்வையிட்டுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த பாண்டிச்சேரி முதலமைச்சர் திரு. வைத்திலிங்கம் வெள்ளத்தால் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ள சிதம்பரத்தில் சிக்கிக் கொண்டுள்ளதாக நேற்றுச் சென்னை வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழகத்தில் வெள்ள நிவாரண நடவடிக்கைகள் துரித கதியில் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

அனுரா பண்டாரநாயக்கா ஒரு சர்ச்சைக்குரிய அரசியல் வாதியாகத் திகழ்ந்து வருகிறார். அவர் ''சன்டே ரைம்ஸ்'க்கு அளித்த பேட்டியின் ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது.

# ★ இனப்பிரச்சினை தீர என் தந்தை வகுத்த வழி செல்ல வேண்டும்

கே: ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமைப் பதவியிலிருந்து ஸ்ரீமாவோ விலகப் போவதாகவும், இடது சாரிக் கூட்டணி ஒன்றிற்குத்தலைமை தாங்கவிருப்பதாகவும் செய்திகள் வந்துள்ளன இது பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: இப்படியான ஒரு தீர்மானம் எடுத்திருப்பதாகத் திருமதி பண்டாரநாயக்கா கட்சிக்கு அறிவிக்கவில்லை எனவே இது விடயமாக நான் அபிப்பிராயம் தெரிவிக்க இயலாது. இத்தகவலைக் கூட ஒரு சிங்கள வாரப் பத்திரிகை மூலம்தான் அறிந்தோம். என்னைப் பொறுத்தவரை திருமதி பண்டாரநாயக்காவைக் கட்சியை விட்டு விலகும்படி யாரும் கூற

# 'சிவில் நிர்வாகம் எனக் கூறி இராணுவ ஆட்சியா?'

''மட்டக்களப்பு மாவட்டத்தில் 81 பாதுகாப்புப் படை முகாம்கள் உள்ளன. எட்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவை உள்ளடக்கிய இந்த மாவட்டத்தில் 81 முகாம்களும் பரவலாக உள்ளன. இங்கு நடப்பது சிவில்நிர்வாகமா அல்லது இராணுவ ஆட்சியா'' இப்படி வினா எழுப்புகிறது ஹொட்ஸ்பிறிங் வார இதழ்.

சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தியுள்ளோம் என அரசு கூற அங்கு சிவில் அதிகாரிகளிலும் பார்க்கக்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பதவி வெற்றிடம்

பதவி: 'பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி (தற்காலிகம்/ ஒப்பந்தம்)

சம்பளம்: கல்வித்தகைமைகள்/ அனுபவங்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும்.

கல்வித்தகைமைகள்:

1) அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் வைத்தியமானி சத்திர சிகிச்சைமானி (எம் பி பி எஸ்) பட்டம் பெற்றவர்.

அல்லது

2) பதிவு செய்யப்பட்ட மருத்துவர்/ உதவி மருத்துவர் (ஆர் எம். பி ஏ எம் பி )க்கான கல்வித்தகைமை பெற்

பண்டார நாயக்கா கட்சிக்கு அறிவிக்கவில்லை. எனவே இது விடயமாக நான் அபிப்பிராயம் தெரிவிக்க இயலாது. இத் தகவலைக் கூட ஒரு சிங்கள வாரப் பத்திரிகை மூலம்தான் அறிந்தோம். என்னைப் பொறுத்தவரை திருமதி பண்டார நாயக்காவைக் கட்சியை விட்டு விலகும்படி யாரும் கூற வில்லை. ஜனாதிபதித் தேர்தல் வந்தால் திருமதி பண்டார நாயக்காவே எமது வேட்பாளர் என நான் சமீபத்தில் கூறி யிருந்தேன்.

இது திருமதி பண்டாரநாயக்கா கட்சியை விட்டு விலக வேண்டுமென்று விரும்பியவர் கட்டிவிட்ட கதை. இன்றைய சூழ்நிலையில் யு. என். பி. அதிருப்தியாளர்களும் முக்கிய பங்களிப்புச் செய்ய வேண்டும். இடதுசாரிக் கூட்டணி இந்த நிலையில் அவர்களை ஒரம் கட்டும் யு. என். பி அதிருப்தியாளர்களும், மாக்சிய வாதிகளும் ஒரு பொது வேலைத் திட்டத்தில் இணைந்து செயற்படுவார்களா?

எனது தகப்பனார் 1956 இல் செய்ததுபோல் யு என். பி. எதிர்ப்புக் கூட்டணி ஒன்று உருவாக்கப்படல் வேண்டும். கீழ்க் காணும் குறிக்கோள்களை அடையக் கூடிய வகையில் அக்கூட்டணி அமைதல் வேண்டும்.

1. நிறைவேற்று ஜனாதிபதி கொண்ட ஆட்சி முறையை அகற்றிப், பாராளுமன்ற ஜனநாயக முறையை மீண்டும் அமைத்தல்.

2. இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட்டுச் சகல மக்களிடையே ஒற்றுமையையும், அமைதியையும் ஏற்படுத்த வேண்டும்.

இப்படியான ஒரு கூட்டணி அமைவதை நான் எதிர்ப்பவனல்ல. இந்தக் கூட்டணியில் தமிழர்களும், முஸ்லிம்களும் பங்குபற்ற வேண்டும். கூட்டணி ஒன்று அமைத்து அதற்கு இடதுசாரிக் கூட்டணி என்று லேபல் இட்டால் அக்கூட்டணியில் இரண்டு, மூன்று கட்சிகளே பங்குபற்றும் வாய்ப்பு இருக்கும் ஒரு சில கட்சிகள் மட்டும் பங்குபற்றும் வகையில் கட்டுப்பாடாக அமையும் இதனால் யு என். பி அதிருப்தியாளர்கள் முஸ்லிம்கள் தமிழ்க் கட்சிகள் ஆகியோர் சேர முடியாத நிலை உருவாகும்.

தில் 81 பாதுகாப்புப் படை முகாம்கள் உள்ளன. எட்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவை உள்ளடக்கிய இந்த ...ளும் பரவலாக உள்ளன. இங்கு நடப்பது சிவில்நிர்வாகமா அல்லது இராணுவ ஆட்சியா'' இப்படி வினா எழுப்பு ... இதழ்.

சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தியுள்ளோம் என அரசு கூற அங்கு சிவில் அதிகாரிகளிலும் பார்க்கக் கூடுதலாகச் சீருடை ஆட்களே உள்ளனர் என்று வெளிநாட்டுச் செய்தி ஸ்தாபனங்கள் சுட்டிக்காட்டியதையும் குறிப்பிட்டுள்ளது.

திருகோணமலையில் சென்ற பங்குனி மாதம் 150 இராணுவமுகாம்கள் இருந்தன. இப்போது அங்கு 171 இராணுவ முகாம்கள் உள்ளன என மேலும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அழகியற்கல்வி நிலையம்

# அசம்பாவிதத்தையடுத்து மூடப்பட்டுள்ளது

அழகியற் கல்வி நிலையத்தை மூடிவிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் இக்காலப் பகுதியிலிருந்து (16-11-91) இந் நிலையப் பகுதி தடை செய்யப்பட்டதாகவும் மறு அறிவித்தல் வரை இத்தடை இருக்குமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையத்தில் இம்மாதம் 14 ஆம், 15 ஆம் திகதி காலை இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாகப் பணிப்பாளரால் விசேட விசாரணை நடத்தப்படும் என்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நேற்றுப் பகல் விசேட அறிவிப்பு மூலம் தெரிவித்துள்ளது.

## காணவில்லை

கலைச்செல்வி பாசமலர் (வயது 17) 31-10-91 இல் இயக்கச்சிக்கும் - பரந்தனுக்கும் இடையில் காணாமல் போய்விட்டார். இவர் பற்றிய தகவலறிந்தோர் சின்னையா கோவிந்தசாமி புதுமுறிப்பு, உருத்திரபுரம் அல்லது தவம் ஸ்ரோர்ஸ் ஈச்சமோட்டை என்ற முகவரியுடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். 11031

## சிறு விளம்பரம்

### சோதிடம்

தீராத தொல்லைகள், கண்ணூறு, நாவூறு நீங்க, குடும்பப் பிணவு நீங்க, பணம் பெருக மற்றும் எல்லா பிரச்சினைகளுக்கும் யந்திரம் பெற்று வழிபடலாம் தீராவிடில் பணம் திரும்பப் பெறலாம். ஸ்ரீசத்தி கணேஷ் உபாசகர் ஸ்ரீ மாவை விநாயகர் சோதிடநிலையம் (ஸ்ரீ வீரமாகாளி கோவிலடி) நல்லூர்.

11019

2) பதிவு செய்யப்பட்ட மருத்துவர்/ உதவி மருத்துவர் (ஆர் எம். பி ஏ எம் பி )க்கான கல்வித்தகைமை பெற்றவர்.

மேற்படி கல்வித்தகைமைகளைக் கொண்ட அரச, தனியார் சேவையில் இருந்து ஒய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

பெயர், முகவரி, கல்வித் தகைமை, வேலையனுபவம், வயது போன்ற விபரங்களைகொண்ட விண்ணப்பத்தினை இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் உதவிப் பதிவாளரிடம் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ 91 11. 29-ம் திகதிக்கு முன்சேர்க்கவும்.

பதில் வைத்திய (Relief) அதிகாரியாகக் கடமையாற்ற விரும்பும் விண்ணபதாரிகள் நாள் ஒன்றுக்கு எவ்வளவு சம்பளம் கோருகின்றார்கள் என்ற விருப்பத்தினையும் விண்ணப்பத்திற் குறிப்பிட வேண்டும்.

பதிவாளர்

11030

★ பட்டொளி வீசிப் பறக்கும் புலிக்கொடிகள்

★ மாவீரர் உருவம் தாங்கிய படங்கள்

★ அலங்கார வளைவுகள், மேடைகள்

## வலிகாமம் மேற்குப் பகுதியிலும்

# மக்களின் பேரெழுச்சி ஏற்பாடுகள்!

தாயக மீட்புக்காகத் தம் இன்னுயிர் ஈந்து, தமிழீழ மக்கள் தம் இதயமதில் இரண்டறக் கலந்திட்ட மாவீரர் வாரத்தினையொட்டி குடாநாடெங்கும் எழுச்சி நிலை நாளுக்கு நாள் வலுப்பட்டு வியாபித்து வருவதாக எமது நிருபர்கள் அறிவிக்கின்றார்கள். மக்கள் புத்துணர்ச்சியுடன் இரவு, பகலென்று பாராது ஏற்பாடுகளை நிறைவு செய்வதில் மிகுந்த சிரத்தை கொண்டிருப்பதனையும் அவதானிக்க முடிகின்றது என்றும் அவர்கள் கூறுகின்றார்கள்.

இந்த வகையில் மாவீரர் வாரத்தை முன்னிட்டு வலிகாமம் மேற்கு சங்கானை பட்டணப் பகுதியும் எழுச்சிக் கோலம் பூண்டுள்ளது. சந்திக்குப் பக்கத்திலுள்ள பிரதான வீதியில் நூறு அடி நீளமான பிரமாண்டமான அலங்காரப் பந்தல் நிறுவப்பட்டுள்ளது.

சங்கானை- மல்லாகம் வீதிச் சந்தியில் அலங்கார வளைவு ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றது. பனை நிலையம், மற்றும் பஜார் வீதி ஆகியன புலிச் சின்னத்துடன் கூடிய மஞ்சள், சிவப்பு நிறக் கொடிகளால் அலங்காரம் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை சித்தன்கேணிச் சந்தியில் நான்கு பக்க வீதிகளிலும் நான்கு பிரமாண்டமான அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் மறைந்த மாவீரர்களின் உருவப்படங்களும் வைக்கப்பட்டுள்ளன. பண்டத்தரிப்புச் சந்தியில் குடைவடிவில் அலங்கார மேடை நிர்மாணிக்கப்பட்டு அங்கு மாவீரர்களான வீரமரணமடைந்த முன்னாள் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் மேஜர் பிரசாத், மேஜர் தும்பன், லெப். மேஜர் தியாகி திலீபன் ஆகியோரின் முழுநீள உருவப் படங்கள் வைக்கப்பட்டுள்ளன. இதற்கு மின்சார விளக்குகளும் பொருத்தப்பட்டு இரவு வேளையில் மின்னொளி வழங்கப்பட்டுள்ளது சுழிபுரம் வழக்கம்பரையில் ஆறு உற்பத்திக் குழுக்கள் ஒன்றிணைந்து பிரமாண்டமான அலங்கார வளைவு ஒன்றை நிர்மாணித்துள்ளன.

இது இவ்வாறு இருக்க, இப்பகுதியிலுள்ள சிற்றூர் அவைகள் மாவீரர் தின வாரத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. (13)

## கோபாலசாமியின் தம்பி சந்தேகத்தின்பேரில் கைது

திராவிட முன்னேற்றக் கழக முக்கிய பிரமுகரான திரு வை கோபாலசாமியின் இளைய சகோதரரான ரவிச்சந்திரனை பொலிசார் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்ததாக அறிவிக்கப்படுகின்றது.

இவர்ராஜீவ்காந்தி கொலை வழக்குத் தொடர்பாகவே கைது செய்யப்பட்டதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவர் ராஜீவ்காந்தி, பத்மநாபா ஆகியோரது கொலைகளுடன் சம்பந்தப்படிருந்ததாகச் சந்தேகிக்கப்படும் குண்டுசாந்தன் என்பவருக்குப் புகலிடம் அளித்ததாக சந்தேகத்தின் பேரில் பொலிசார் கூறியுள்ளனர்.

## கொலைச் சந்தேகநபர்களைச்சந்திக்க சிறைச்சாலைக்கு அனுரா விஜயம் செய்தாராம்

கொலைச் சந்தேக நபர்களைப் பார்வையிட அனுரா பண்டாரநாயக கண்டி சிறைச்சாலைக்கு விஜயம் செய்தார் என்று கூறி சுதந்திரக்கட்சி உறுப்பினர் ஒருவரால் ஆட்சேபம் கிளப்பப்பட்டுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலின் போது பதுளை மாவட்டத்தில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பான சந்தேக நபர்களைப் பார்வையிடவே அனுரா சிறைச்சாலைக்குச் சென்றதாக இவ்வாட்சேபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கொழும்பு நாளிதழ் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

★ ★

## இன்று ஆங்கில தினம்

கொக்குவில் இந்துக்கல்லூரியில் இன்று திங்கட்கிழமை ஆங்கிலதினம் கொண்டாடப்படுகின்றது.

அனைத்து மாணவர்களையும், ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு கொக்குவில் கொத்தணிச் செயலாளர் திரு. த. குலசிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.

★ ★

## கலந்துரையாடல்

பல வருடங்களாக செயற்படாதிருக்கும் யாழ் மாவட்ட விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தை, புனரமைத்து மீள இயங்கச் செய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் இன்று 3.00 தமிழீழ ஆய்வு நிறுவன மையப்பணியக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த ஆலோசனைக் கூட்டத்துக்கு யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த ப.நோ. கூ. சங்கத் தலைவர்களும் கூட்டுறவுத்துறையில் ஆர்வம் உள்ளவர்களும் அழைக்கப்படுகின்றனர்.

## பரிசோதனைககுழாய்க் குழந்தை ரஷ்யாவிலும் ஊக்குவிப்பு

1978 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27 ஆம் திகதி பிரிட்டனில் முதற் பரிசோதனைக் குழாய்க் குழந்தை 'லூயிஸ் டொமினிக்கா' பிறந்து உலகை வியப்பில் ஆழ்த்தியது அதனைத் தொடர்ந்து உலகில் பல்வேறு இடங்களில் பரிசோதனைக் குழாய்க் குழந்தைகள் பெறப்பட்டு வருகின்றன ரஷ்யா சமீபத்தில் பரிசோதனைக் குழாய்க் குழந்தைகள் பெறுவதை

ரங்களை அறிய முடியடக் கூடாது என்பனவே அம்மூன்று நியந்தனைகளுமாகும். (16)

## உதவி ஜெயிலர் உட்பட 13 பேர் பதவி நீக்கம்

வேலூர் மத்திய சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து வந்த எட்டு ஆயுள் கைதிகள் தப்பியோடிய சம்பவம் தொடர்பாக ஒரு உதவி ஜெயிலரும், பன்னிரண்டு காவலர்களும் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தப்பியவர்களைப் பிடிக்கத்

## கடந்த 3 வருடங்களில் ஆசிரியர் நியமனங்கள்

### - இவர் கூறும் தகவல்

கடந்த மூன்று வருடங்க படித்துவிட்டு வேலையில்

சபாநாயகரினால் நிராகரிக்கப்பட்ட அரசியல் குற்ற விசாரணைப் பிரேரணை அரங்கேறாத ஓர் சுவாரஸ்யமான நாடகமே. இதில் கதாநாயகன் வில்லனாகவும், வில்லன் கதாநாயகனாகவும் மாறிய வினோதம் உண்டு.

## அரங்கேறாத அரசியல் நாடகம்

ஸ்ரீலங்கா பாராளுமன்றம் பல சந்தர்ப்பங்களில் நாடக மேடையாக மாறியிருக்கிறது. அங்கு கதாநாயகன் வில்லனாக மாறுவதும், வில்லன் கதாநாயகனாக மாறுவதும் அடிக்கடி நிகழும் சம்பவங்கள்.

### அரசியல் நாடகம்

சமீபத்தில் பாராளுமன்றில் அரங்கேற இருந்த 'அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணை' நாடகத்தில் இரு கதாநாயகர்கள் மிகப் பிரமாதமாக நடித்துப் பதவிகளைத் தக்க வைத்துக் கொண்டார்கள். முதலாவது கதாநாயகனான ஜனாதிபதி தனது அபரிமிதமான நடிப்பாற்றலினால் இரண்டாவது கதாநாயகனான சபாநாயகரைத் தன் வசம் இழுத்து அவரை நடிக்க விடாது அடக்கிக் கொண்டார்.

ஜனாதிபதி சற்றும் எதிர்பாராத வகையில் அவருக்கு எதிராக அரசியல் குற்றச் சாட்டுப் பிரேரணை பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. இந்தப் பிரேரணை எப்போது வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தது போல் உடனடியாக அதை சபாநாயகர் ஏற்றுக் கொண்டார். ஜனாதிபதியிடமிருந்தும், அவரது ஆதரவாளர்களிடமிருந்தும் கண்டனக் கணைகள் வந்தன.

### சபாநாயகரின் இரட்டை வேடம்

சபாநாயகர் நிலைகுலைந்து போனார். இரட்டை வேடம் போடுவதில் அவர் நிபுணர். தனது தீர்மானத்தை அவர் மாற்றினார். குற்றச்சாட்டுப் பிரேரணை செல்லுபடியற்றது எனத் தீர்ப்பு வழங்கினார்.

இந்தக் குற்றச் சாட்டுப் பிரேரணையின் சூத்திரதாரியே சபாநாயகர்தான் என்று பேசிக் கொண்டனர் விஷயம் அறிந்த வட்டாரத்தினர். சபாநாயகரே அத்துலத் முதலிக்கு இப்பிரேரணை பற்றிய எண்ணத்தையே தோற்றுவித்துத், தேவையான தகவல்களும் கொடுத்ததாகச் சமர வீரவன்னி தெரிவித்திருக்கிறார்.

'சபாநாயகரே இப்பிரேரணையின் சிற்பி. அவரே இதை உருவாக்குவதற்குக் காரணகர்த்தாவாக அமைந்தவர். எங்களை அழைத்துப் பிரேரணையில் கை ஒப்பமிட வைத்தவரும் அவரேதான்' என்றார் முன்னாள் அமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திரா,

இரட்டை வேடம் போடுவதில் கைதேர்ந்தவர் சபாநாயகர் என்பதைப் பாவம் பிரேமச்சந்திரா அறிந்திருக்கவில்லை.

எதிர்க் கட்சியினரும் சபாநாயகர் தங்கள் பக்கம் என்ற திடமான நம்பிக்கையில் இருந்தனர்.

### தொண்டமானின் சாணக்கியம்

அரசாங்கம் இக்கட்டான நிலையில் இருக்கும்போதெல்லாம் கை கொடுத்து மீட்சி அளித்து வருகிறார் அமைச்சர் தொண்டமான். குற்றச்சாட்டுப் பிரேரணை நிராகரிக்கப்படுவதற்கு முதல் நாள் இவர் சபாநாயகரைச் சந்தித்திருக்கிறார்.

''இந்த பிரேரணையை ஏற்றுக்கொண்டதன் மூலம் உங்கள் கட்சித் தலைவருக்கெதிராகவே செயற்பட்டுள்ளீர்கள். நீங்கள் துணிகரமான முடிவை எடுத்துள்ளீர்கள். உங்களுடைய துணிவையும், நேர்மைத் திறத்தையும் பாராட்டுகிறேன் ஆனால் இப்போது 116 எம்பிக்கள், தாங்கள் இந்தப் பிரேரணையை எதிர்ப்பதாகக் கூறியுள்ளார்கள். எனவே நீங்கள் இப்பிரேரணையைக் கைவிடுங்கள். எதிர்க் கட்சிகளின் வலையில் சிக்கி மாட்டிக் கொள்ளாதீர்கள்'' என்று தொண்டமான் மேலும் சபாநாயகருக்கு அறிவுறுத்தியுள்ளார். இன்னும் வேறு புத்திமதிகளும் கூறியிருக்கலாம்.

தொண்டமான் பழுத்த அரசியல்வாதி. அரசியல் சாணக்கியம் கொண்ட ராஜதந்திரி. 1948 ஆம் ஆண்டு ஐ.தே.க அரசுக்கு எதிராகச் சத்தியாக்கிரகம் இருந்தவர். இன்று அதே ஐ.தே.க அரசில் அமைச்சராக உள்ளார். சபாநாயகருக்கு இப்படி அறிவுறுத்திய தன் நோக்கம் என்ன? சிறுபான்மை இனத்தவர் பிரேமதாஸ அரசிடம் இருந்து கூடிய உரிமைகளைப் பெறலாம் என்ற கணிப்பு அவர் மனதில் இருந்ததே காரணம்.

பரிசோதனைக் குழாய்க் குழந்தைகள் பெறப்பட்டு வருகின்றன ரஷ்யா சமீபத்தில் பரிசோதனைக் குழாய்க் குழந்தைகள் பெறுவதை ஊக்குவிக்குமுகமாக மிகக் குறைந்த கட்டணத்தில் இதனைச் செய்ய முன்வந்துள்ளது ஆனால் அதே சமயம் இவ்விதம் கருத்தரிக்க விரும்புவோருக்கு மூன்று நிபந்தனைகள் விதித்துள்ளது. இவ்விதம் கருத்தரிக்கும் பெண் கருச் சிதைவு செய்ய முயலக் கூடாது, அரசிடம் பராமரிப்பு கோரக்கூடாது சம்பந்தப் பட்ட ஆணைப் பற்றிய விவ

## ஆசிரியர் நியமனங்கள்

### - இவர் கூறும் தகவல்

கடந்த மூன்று வருடங்களில் இன விகிதாசார அடிப்படையில் ஐம்பத்து ஒன்பதாயிரம் ஆசிரியர்கள் நியமனம் செய்யபபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுத் தலைவர் ஜோர்ஜ் மெண்டிஸ் இவ்வாறு தெரிவித்ததாக கொழும்பு நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

படித்துவிட்டு வேலையில்லாதிருந்த 7953 பட்டதாரிகளுக்கு 2000 ரூபா மாதாந்த சம்பளத்தில் வேலை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தாராம்.

வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தப்பியவர்களைப் பிடிக்கத் தனிப்பொலிப்படை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இவர்களில் இருவர் இலங்கையர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதே ஐ.தே.க அரசில் அமைச்சராக உள்ளார். சபாநாயகருக்கு இப்படி அறிவுறுத்திய தன் நோக்கம் என்ன? சிறுபான்மை இனத்தவர் பிரேமதாஸ அரசிடம் இருந்து கூடிய உரிமைகளைப் பெறலாம் என்ற கணிப்பு அவர் மனதில் இருந்ததே காரணம்.

நினைத்ததை முடிப்பவர் தொண்டமான். இந்தப் பிரேரணை விடயத்திலும் அவர் நினைத்ததைச் சாதித்து விட்டார்.

### அதிருப்தியாளர்களின் வகுப்பு வாதம்

இந்தப் பிரேரணை நாடகத்தில் அத்துலத்முதலி குழுவினர் தோல்வி கண்டதும், அவர்களது ஆவேசம் சபாநாயகர் மீது திரும்பியது அடுத்துத் தொண்டமான் மீது திரும்பியுள்ளது. ஈற்றில் தமிழினத்தின் மீதே திரும்பியிருக்கிறது.

அவர்களுடைய பேச்சுக்கள் இனக் கலவரத்தைத் தூண்டுவதாக அமைகின்றன. இந்த அரசியல் நாடகத்தில் தாங்கள் தான் உண்மையான வில்லன்கள் என நிரூபிக்கிறார்கள். ஜனாதிபதி புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதாக அத்துலத்முதலி எல்லா மேடைகளிலும் கூக்குரலிடுகிறார். அது இந்தியாவிலும் எதிரொலித்தது. சார்க் மகாநாடு குழம்பியதற்கு அதுவும் ஒரு காரணமாகக் கூறப்படுகிறது.

### தமிழினம் பகடைக்காயா?

புலிகளுக்கு ஆயுதம் வழங்கப்பட்டதாக அத்துலத்முதலி குற்றம் சாட்டும் காலப்பகுதியில் அவரும் அரசில் அமைச்சராக இருந்தார் அப்போது மௌனமாக இருந்துவிட்டு இப்போது கூக்குரலிடுகிறார். தமிழ் மக்களை வைத்தே அரசியல் இலாபம் தேடுவது ஒரு பாரம்பரியமாகி இந் நாட்டில் வந்துவிட்டது. அதையே அதிருப்தியாளர்கள் கடைப்பிடிக்கிறார்கள்

சிங்கள அரசியல் வாதிகளுக்கு அரசியல் சித்தாந்தங்களில் எப்போது அதிருப்தியும், விரக்தியும் ஏற்படுகிறதோ அப்போது அவர்கள் பார்வை தமிழர்கள் மேல் திரும்பும். அதையே அன்று பண்டார நாயக்காவும். ஜே ஆரும். ஸ்ரீமாவோவும் செய்தனர். இன்று அத்துலத் முதலி கூட்டம் செய்கிறது.

இந்த அரசியல் சந்தர்ப்பவாதம் எத்தனை நாட்களுக்கு சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறப்போகிறது? காலம் தான் பதில் சொல்லும்.

### ★ மட்டக்குளியாவில்

## 9 பேர் கைது: கொலை கொள்ளைகளில் தொடர்பு?

கொழும்பின் புறநகர்ப்பகுதியான மட்டக்குளியாவில் உள்ள வீடொன்றில் பெருமளவு பயங்கர ஆயுதங்களும் கைக்குண்டுகளும் மூகத்துவாரம் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த வீடு நீண்ட காலம் பூட்டப்பட்டிருந்ததை அறிந்த மக்கள் இதுபற்றிப் பொலிஸாருக்கு அறிவித்திருந்தனர்.

இது சம்பந்தமாக தமிழர்கள் நால்வர் உட்பட ஒன்பது பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் கொழும்பில் நிகழ்ந்த கொலைகளுக்கும் கொள்ளைகளுக்கும் தொடர்புள்ளவர் என்றும் இந்தக் குண்டுகள் வெல்லம் பிட்டியவில் உள்ள கைக்குண்டு தயாரிக்கும் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டவை என்றும் பொலிஸார் கூறினர்.

### மந்திரி வருகை

மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் புதுடில்லி செல்லும் வழியில் நேற்றுகொழும்பு வரவிருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர் உத்தேச ஒரு நாள் சார்க் மாநாடு பற்றி ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச, வெளிவிவகார அமைச்சர் ஹரல்ட் ஹேரத் ஆகியோருடன் ஆலோசனை மேற்கொள்வார் என்றும் கூறப்படுகிறது.

## நாணல் மூலம் மின்சாரம் கனடாவில் கண்டுபிடிப்பு

கனடாவில் 3 முதல் 5 மீற்றர் உயரம் வரை வளரும் சீனக் கோரைப் புல் என்று சொல்லப்படும் ஒருவகை நாணலைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கலாம் என்று விஞ்ஞானிகள் சமீபத்தில் கண்டறிந்துள்ளனர்.

கனடாவில் மியூனிச் என்ற நகரில் உள்ள ஆராய்ச்சி நிலையத்தில் கடந்த இரு ஆண்டுகளாக, இது தொடர்பாக நடத்தப்பட்ட பரிசோதனை வெற்றி அளித்துள்ள போதிலும் கனடிய அரசு இவ் மின்சார உற்பத்தியை நடைமுறைப்படுத்தத் தயங்குகிறது. காரணம் அணு மின்சாரம் தயாரிக்க ஆகும் செலவை விட இரண்டு மடங்கு செலவாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. (16)

# இடைத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றிவாய்ப்பு

# நரசிம்மராவ் 5 லட்சம் வாக்குகளால் வெற்றி

இந்தியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற 15 பாராளுமன்ற தொகுதிகளுக்கும், 55 சட்டப்பேரவை தொகுதிகளுக்குமான இடைத்தேர்தலில் பாராளுமன்ற தொகுதிகளில் இந்திரா காங்கிரஸ் முன்னணியில் நிற்கிறது.

### ஏழு தொகுதிகளில் காங்கிரஸ் வெற்றி வாய்ப்பு

வாக்குகள் எண்ணப்பட்டு வரும் 11 பாராளுமன்றத் தொகுதிகளில் 7 தொகுதிகளில் இந்திரா காங்கிரஸ் வெற்றி பெறும் நிலையில் உள்ளது. நந்தியால், வாரணாசி, வெங்கனால், கட்ச், அமெதி, தர்வா தொகுதிகளில் வாக்கு எண்ணிக்கையின் படி காங்கிரஸ் பெரு வெற்றியீட்டும் நிலையில் உள்ளது.

### பிரதமர் நரசிம்மராவ், சரத்பவார் அமோக வெற்றி

ஆந்திரா நந்தியால் தொகுதியில் போட்டியிட்ட பிரதமர் நரசிம்மராவ் பெரும்பான்மை வெற்றி பெறும் நிலையில் உள்ளார் தமக்கு அடுத்துள்ள பாரதிய ஜனதா வேட்பாளரை விட நரசிம்மராவ் 5 லட்சம் வாக்குகள் அதிகம் பெற்றுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் வாரணாசி தொகுதியில் தமக்கடுத்த பாரதிய ஜனதா வேட்பாளரை விட 3 லட்சம் வாக்குக்கள் கூடுதலாக பெற்றுள்ளார்.

ராஜீவ் காந்தியின் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட கப்டன் சதீஷ் சர்மா 40 ஆயிரம் வாக்குகளால் முன்னணியில் உள்ளார்.

இதேபோன்று ஒரிஸாவிலும் காங்கிரஸ் வெற்றி பெறும் வாய்ப்பு அதிகமாக உள்ளது.

### சட்டப்பேரவையில் பலப்பரீட்சை

சட்டப்பேரவை தொகுதிகளை பொறுத்தவரையில் உத்தரப்பிரதேசத்தில் மூன்று தொகுதிகளில் ஜனதா தள் கட்சி முன்னணியில் உள்ளது. மணிப்பூரில் இரு சட்டப்பேரவை தொகுதிகளிலும் காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளது.

ராஜஸ்தான், குஜராத் சட்டப் பேரவைகளில் இந்திரா காங்கிரஸ் பின்னடைவு நிலையில் உள்ளது.

### பீஹாரில் வாக்குஎண்ணல் இடைநிறுத்தம்

இதேவேளை தேர்தல் வன்முறை, குளறுபடிகளால் பீஹாரில் 3 பாராளுமன்ற தொகுதிகளிலும் 4 சட்டப் பேரவை தொகுதிகளிலும் வாக்கு எண்ணும் வேலையை இடைநிறுத்துமாறு இந்திய தேர்தல் கமிஷன் உத்தரவிட்டுள்ளது

பீஹாரில் தேர்தல் வாக்கு பதிவு எண்ணும் பணி மேலும் சில தொகுதிகளில் நிறுத்தப்படலாம்.

### பிரதமர் வெற்றி

பிந்திய செய்திகளின்படி பிரதமர் நரசிம்மராவும், பாதுகாப்பு அமைச்சர் சரத்பவாரும் தலா 5½ லட்சத்திற்கும் அதிகமான வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில்

## கால்நடை வளர்ப்போர் வருமானம் இன்றிப் பாதிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்நடை வளர்ப்போர் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக வருமானம் இன்றிப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கால்நடைகளில் இருந்து பெறப்படும் பாலை விற்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் கால்நடைகளின் எருவும் விற்கமுடியாது வீடுகளிலும், தோட்டங்களிலும் தேங்கியுள்ளன.

மாங்குளம் பாற்சபை இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. 08

## வவுனியா பஸ் டிப்போவில் ஊழியர்கள் தங்க வசதியில்லை

வவுனியா இ. போ. ச. சாலையில் குறைந்தளவு பஸ் வண்டிகளே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அதிகமான பஸ்கள் உதிரிப் பாகங்கள் இன்றி கட்டையில் ஏற்றிவிடப்பட்டுள்ளன.

வேலைத்தள ஊழியர்கள், சாரதிகள், நடத்துனர்கள் தங்கிவரும் விடுதியும் இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்டதால் இங்கு ஊழியர்கள் தங்க வசதியின்றி வெளியிடங்களில் இருந்தே கடமைக்கு வருகின்றனர்.

இவ்வூழியர்கள் பயன்படுத்தும் குடிநீர்க் கிணறு பற்றைகளாக மூடப்பட்டும் அசுத்தப்படுத்தப்பட்ட நிலையிலும் காணப்படுகிறது. 08

## அரிசி இறக்குமதி தீர்வை 7 சத வீதமாகக் குறைப்பு

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசிகளுக்கான இறக்குமதி தீர்வை குறைக்கப்பட்டுள்ளதாக உணவுக் கூட்டுறவு அமைச்சர் நேற்று தெரிவித்தார்.

அரிசி இறக்குமதித் தீர்வை 12 சத வீதத்திலிருந்து 7 சத வீதமாக குறைக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் அரிசியின் விலையை 15 ரூபா விற்கு மேல் விற்க வேண்டாம் எனவும் அமைச்சுக் கேட்டுள்ளது.

## வீதிகளுக்கு பெயர்கள்

வட்டுக்கோட்டைப் பகுதியில் நேற்று மாலை நான்கு மாவீரர்களது பெயர்கள் வீதிகளுக்குச் சூட்டப்பட்டன.

வட்டுக்கோட்டை கிழக்கில் உள்ள வீதி ஒன்றிற்கு மாவீரர் (சு. சுகந்தகுமார்) தீபன் வீதியென்றும், வட்டுக்கோட்டை மேற்கில் உள்ள வீதி ஒன்றிற்கு மாவீரர் (அ. தஷ்யந்தன்) கைலன் வீதியென்றும், வட்டுக்கோட்டை வடக்கில் உள்ள வீதி ஒன்றிற்கு மாவீரர் (பா. மால் மருகன்) விக்னேஸ் வீதியென்றும், வட்டுக்கோட்டை தெற்கில் உள்ள வீதியொன்றிற்கு மாவீரர் (கு மணிவண்ணன்) கலைச்செல்வன் வீதியென்றும் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன (18)

## நூலக சேவை ஒழுங்கு

யாழ் மாவட்டத்திலுள்ள பொதுசன நூலகங்களின் சேவைகளை விரிவுபடுத்தி மக்களுக்குச் சிறந்த நூலக சேவைகளை வழங்குவதற்கான துரித நடவடிக்கைகளை யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். டிவகலாலா மேற்கொண்டுள்ளார்.

இதற்கென நூலகங்கள் அபிவிருத்திக்கான திட்டக் குழுவொன்றையும் அண்மையில் நடைபெற்ற நூலகவியல் செயலமர்வின் போது அவர் தெரிவுசெய்துள்ளார்.

யாழ் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் பொதுசன நூலகங்களின் அபிவிருத்திகள் பற்றிய அறிக்கைகளைத் தயாரித்து இக்குழு யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் கையளிக்கும் இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (11)

## தென்தமிழீழ சித்திரக் கண்காட்சி

தென்தமிழீழத்தில் இராணுவ அட்டூழியங்களால் ஏற்பட்ட விளைவுகளைப் படம் பிடித்துக் காட்டும் வகையில் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை மட்டுநகர்/அம்பாறை தொடர்பகத்தினரால் ஓர் சித்திரக் கண்காட்சி யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடாத்தப்படவிருக்கிறது.

இந்நாட்களிலே சிறப்பு நிகழ்ச்சியாக 23 அன்று சில கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன, கலை நிகழ்வுகள் யாவும் தென்தமிழீழ மண்வாசனையை மக்கள் முன் சுமந்து வரும் என்பது குறிப்பிடத்தக்கது

## புதிய கடற்படைத் தளபதி ஜனாதிபதி சந்திப்பு

புதிய கடற்படைத்தளபதியான ரியல் அட்மிரல் கிளான்சி பெர்னாண்டோ ஜனாதிபதி பிரேமதாஸவைச் சந்தித்தார்.

இது ஒரு கௌரவச் சந்திப்பு எனவும் தெரிவிக்கப்படுகிறது

புதிய தளபதி தான் கல்வி பயின்ற மொரட்டுவவில் உள்ள கத்தோலிக்க கல்லூரி ஒன்றுக்கும் விஜயம் செய்தார்.

இதேவேளை ஓய்வு பெறும் தளபதி ஆனந்த சில்வாவும் ஜனாதிபதியைச் சந்தித்து பிரியாவிடை பெற்றுக்கொண்டார். 25

## குச்சவெளி தமிழ் மீனவர்களின் உடைமைகள் அபகரிப்பு

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குச்சவெளிப் பகுதியில் தமிழ் மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் பலவும் சில கும்பல்களால் களவாடப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இம் மீனவர்கள் கடற்றொழிலை மேற்கொள்ள முடியாமல் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இழந்த மீன்பிடி உபகரணங்களைப் பெற்று மீண்டும் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள அரசு உதவ வேண்டுமென இவர்கள் கோரிக்கை விடுத்த போதிலும் இதுவரை பயனளிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவர்கள் பாவிக்கும் குடிநீர்க் கிணறுகள் பல மாதங்களாக சுத்தப்படுத்தாமல் பாழடைந்த நிலையில் இருந்து வருவதால் குடிநீருக்கும் கஷ்டம் ஏற்பட்டுள்ளது. 08

## நிறைகுறைந்த நிவாரணம்

திருகோணமலை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் உலர் உணவுப் பொருள்கள் நிறை குறைத்து விநியோகிக்கப்படுகிறது

இது பற்றி இப்பகுதி அகதிகள் புனர்வாழ்வுக் குழுவிடம் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 08

வெளிநாடு செல்வோர்கள்

## நகைகள் கொண்டு செல்ல முன் அனுமதி பெறவேண்டும்

கொழும்பிலிருந்து விசாவுடன் வெளிநாடுகளுக்குச் செல்லும் வடபகுதியைச் சேர்ந்தவர்கள் தங்களுடன் நகைகளைக் கொண்டு செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது. கொண்டு செல்லப்பட்ட நகைகள் திருப்பிவிடப்பட்டுள்ளன.

மத்திய வங்கியின் முன் அனுமதி, சுங்கப்பகுதி முன் அனுமதி பெற்றாலே நகைகளைக் கொண்டு செல்ல முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் இந்த விவரம் தெரியாத பலர் தமது நகைகளைக் கைவிட்டுச் செல்ல வேண்டியுள்ளதாக கட்டுநாயக்க விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

வவுனியாவில்...

தடுத்து வைக்கப்பட்டு விசாரணை மேற்கொண்டதையடுத்து பின்னர் விடுவிக்கப்

இந்தியப்...

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகவும் முன்னர் இந்தியப் புலனாய்வுக் குழு

## அரச ஆஸ்பத்திரிகளில் பொதுவாக மருந்து தட்டுப்பாடு

## கூட்டத்துக்கு

# அரச ஆஸ்பத்திரிகளில் பொதுவாக மருந்து தட்டுப்பாடு

நாட்டில் உள்ள பல அரசாங்க ஆஸ்பத்திரிகளில் மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுவருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பு மாநகர ஆஸ்பத்திரிகளைத்தவிர ஏனைய ஆஸ்பத்திரிகளில் இவற்றுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

கண்டபடி மருந்துகள் வழங்கப்படக்கூடாது என களஞ்சியப்பகுதிக்கு மேலிடம் உத்தரவு வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### வடக்கு கிழக்கு மட்டுமன்றி

### ஜே. வி. பி....

நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளது.

மாதாந்தம் பொலிஸ் நிலையம் வந்து கையெழுத்திட வேண்டும் என்ற நிபந்தனையுடனேயே இச்சந்தேக நபர்கள் விடுவிக்கப்பட்டமை தெரிந்ததே.

### சிங்கள...

பொலிஸாரின் குற்றச்சாட்டு பொய் என்றும், காயமடைந்தவர் எப்படி வீதியில் திரிகிறார் என்றும் வாதாடினார்.

விளக்கமறியலில் முதலில் வைக்கப்பட்ட இவர்களை பின்னர் பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

### தாய்லாந்து...

பொலநறுவைப் பகுதியில் இவர்களை விடுதலைப்புலிகள் கொண்டுவந்து விடுவித்ததாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

### அணு ஆயுத...

இந்தியாவுடன் சேர்ந்துகொண்டு வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் இருந்து வந்தது.

அணுஆயுத பரவலை தடுக்கும் யோசனையை இந்தியா எதிர்த்து வருவது தெரிந்ததே.

### வவுனியாவில்...

தடுத்து வைக்கப்பட்டு விசாரணை மேற்கொண்டதையடுத்து பின்னர் விடுவிக்கப்பட்டதாகவும், மேலும் சிலர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 08

### டிசம்பர்...

சார்க் விளையாட்டுப் போட்டிக்கு முன்பாக மாநாடு நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளது

இதேவேளை மீண்டும் சார்க் மாநாட்டைக் கொழும்பில் விரைவில் நடாத்த வென மாலைதீவு வெளியுறவு அமைச்சர் பூட்டான், நேபாள ஆகிய நாடுகளுக்குச் சென்று அந்நாட்டுத் தலைவர்களுடன் ஆலோசனை நடாத்தவுள்ளார். இவர் பின் தாயகம் திரும்பும்போது புதுடில்லிக்கும் செல்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### அதிகாரிகளை...

எனச் சுட்டிக்காட்டப்படுகிறது

இராணுவ நடவடிக்கைகள் தொடர்பான செய்திகளை ஒவ்வொரு அதிகாரியும் வெவ்வேறு கருத்துக்களை அண்மையில் வெளியிட்டு வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### இந்தியப்...

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகவும் முன்னர் இந்தியப் புலனாய்வுக்குழுவொன்று கொழும்பு வந்து சென்றமை தெரிந்ததே.

### அம்பாறை..

நடைபெற்ற இத்தாக்குதலின் பின் அப்பகுதிக்கு மேலதிகமாக இராணுவம் அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கபபடுகிறது.

திருகோணமலை வேப்பங்குளம் பகுதியிலும் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீதும் விடுதலைப்புலிகள் நேற்றுமுன்தினம் தாக்குதல் நடாத்தினர்.

தாக்குதல் நடாத்திய பின்னர் ஏற்பட்ட சேதவிவரங்கள் ஏதும் தெரியவரவில்லை.

### காங்கேசன்...

கைக்கு பாதுகாப்பு அமைச்சு இதுவரை எதுவித அறிவிப்பும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1987 இல் அரசாங்க அதிபர், உணவுத் திணைக்கள அதிகாரி ஆகியோரை காங்கேசன்துறைக்கு வருமாறு படை அதிகாரிகள் கூறியதும் பின்னர் அவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததும் தெரிந்ததே.

திப்பு எனவும் தெரிவிக்கப்

## கூட்டத்துக்கு அழைப்பு

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட அகதி முகாம்களின் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்காகச் சம்பந்தப்பட்ட சகல அரச சார்பற்ற நிறுவனங்களையும், சுகாதார அதிகாரிகளையும், கிராம அலுவலர்களையும் இன்றுபிற்பகல் 2 00 மணிக்கு தமது அலுவலகத்தில் நடைபெறும் கூட்டமொன்றில் கலந்துகொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

### சத்துணவு...

பிணிகளுக்கும் தாய்மார்களுக்கும் சுமார் 500 ரூபா பெறுமதியான சத்துணவுகள் ஆத்தியடியில் உள்ள செஞ்சிலுவைச் சங்கக் கிளை நேற்று வழங்கியது; 08

### இலங்கைத்—

தாகவும் இது போலியானது எனவும் தெரிவிக்கப்படுகிறது. தற்போது வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள இந்த நபர் மீது வெளிவிவகார அமைச்சு வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

இதேவேளை ஓய்வு பெறும் தளபதி ஆனந்த சில்வாவும் ஜனாதிபதியைச் சந்தித்து பிரியாவிடை பெற்றுக்கொண்டார். 25

## முல்லைத்தீவில் வயல்கள் தரிசாகின

முல்லைத்தீவில் இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்தவர்களது நெல்வயல் நிலங்கள் தரிசாகக்காணப்படுகின்றன.

முல்லைத்தீவு தெற்கு, கரைச்சிக் குடியிருப்பு தண்ணிமுறிப்பு ஆகிய பகுதிகளிலேயே பல ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் கடந்த இரண்டு வருடங்களாக நெல் வேளாண்மைச் செய்கையின்றி தரிசாகவுள்ளன. 08

### பரீட்சை..

கப்படும்எனவும்பழையபாடத்திட்ட மாணவர்களுக்கு புறம்பான வினாத்தாளும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யாழ்ப்பாணம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு பரீட்சை காகிதாதிகள் அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் திருவனந்திரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ளஅச்சகத்தில் 18 11·91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.